மேலும் இலவச பிரதிநிதிகளுக்கும்,
இலவச பத்திரிக்கை பிரதிநிதிகளுக்கும்,
எங்களை தொடர்பு கொள்ளுங்கள்




இந்தியாவில் இலவச பிரதிக்குத்
தொடர்பு முகவரி :

**The Christadelphians,**
P.O. Box 4237
Bangalore - 560042. INDIA.

ஸ்ரீலங்காவில் இலவச பிரதிக்குத்
தொடர்பு முகவரி :

**The Christadelphians,**
P.O. Box 60,
Negombo - 11500,
SRI LANKA
Email : slcbm2@slnet.lk

# புது சிருஷ்டி

சத்தியத்தையும் அறிவீர்கள். சத்தியம் உங்களை விடுதலையாக்கும்

இதழ் 11

- "என்னுடைய சித்தத்தின்படியல்ல,
  உம்முடைய சித்தத்தின் படியே ஆகக்கடவது"
- "தேவனிடம் திரும்புதல்"
- தரித்து நின்று பாரும்
- உல்களாவிய பயம் மற்றும்
  கிறிஸ்துவின் வருகை (சிந்தனை)
- விதைக்கிறவன்

## கிறிஸ்டடெல்ஃபியர்கள் யார் ?

கிறிஸ்டடெல்ஃபியன்ஸ் (Christadelphians) என்ற பதம் கிரேக்க மூலமொழிகளாகிய Christ மற்றும் adelphos என்ற பதங்களிலிருந்து உருவானது. இதன் அர்த்தம் "கிறிஸ்துவில் சகோதரர்" என்பதாகும். கிறிஸ்டடெல்ஃபியன்ஸ் என்ற உலகளாவிய கிறிஸ்தவ சமுதாயம் 'வேதாகமத்தில் முழுமையாக நம்பிக்கை வைக்கிற' மக்கள் கூட்டமாகும். வேதவாக்கியங்களெல்லாம் தேவனால் அருளப்பட்டவை என்று உறுதியாக நம்புகிறார்கள்.

நாங்கள், தேவனுடைய (ஒரே பேறான) குமாரனாகிய இயேசு கிறிஸ்து வல்லமையோடு பூமிக்குத் திரும்பி வருவார் என்றும், அவர் வருத்தங்கள், அக்கிரமம், ஆக்கிரமிப்புகளை நீக்கி, தமது ஜனங்களுக்கு நியாயத்தையும், சமாதானத்தையும், நீதியையும் கொண்டு வருவார் என்றும் நம்புகிறோம்.

நாம் மரித்தாலும், மரித்தோரிலிருந்து எழும்பி, நியாயந்தீர்க்கப்படுவோம் என்று நம்புகிறோம். அத்துடன், இப்போது வாழும் வாழ்க்கையில் தன்னயமும் பொல்லாங்கும் நிறைந்து வாழ்ந்தவர்கள் நித்தியத்துக்கு வாழமுடியாமல் அழிக்கப்படுவார்கள். அதற்கு மாறாக, தேவனுடைய வார்த்தையை நம்பி கீழ்ப்படிந்து ஜீவித்தவர்கள் நித்தியமாக ஜீவித்திருப்பார்கள். மேலும் ஒவ்வொருவரின் வாழ்விலும் இரண்டு முக்கியமானவைகளை நிறைவேற்றியே ஆக வேண்டும் என்று விசுவாசிக்கிறோம். அவைகளில் (1) தேவனிடம் முழு இருதயத்துடன் அன்பு கூர வேண்டும். (2) உன்னைப் போல பிறரை நேசிக்க வேண்டும்.

ஒருங்கிணைப்பாளர் : லினஸ் டேனியேல்
Email : linus@choose2live.info
http// www.choose2live.info/
இந்தியாவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :
**The Christadelphians,**
P.O. Box 4237
Bangalore - 560042. INDIA.
ஸ்ரீலங்காவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :
**The Christadelphians,**
P.O. Box 60,
Negombo - 11500,
SRI LANKA
Email : slcbm2@slnet.lk
Website: www.readthebible.lk

## புது சிருஷ்டி பதிப்பாளர் குழு

லினஸ் டேனியேல் : தலைமை ஒருங்கிணைப்பாளர்
ராஜபட்சம் ஆனந்தா : மொழிபெயர்ப்பு, பதிப்பு மற்றும் கணினி ஒருங்கிணைப்பாளர்
பவித்ரா : நிர்வாகம், உபப்பதிப்பாளர்

திருமதி கிலாடிஸ் சுகிர்தராஜ் மற்றும் சந்திர மோகன் அவர்களின் தமிழ் மொழிபெயர்ப்பு உதவிகளுக்காக சிறப்பான நன்றி கூறுகிறோம்.

இந்த பத்திரிகையின் வாயிலாக, வேதவாக்கியங்களை வாசிக்க உங்களைத் தூண்டுவதே எங்கள் குறிக்கோள். இதிலுள்ள கட்டுரைகள் உங்களை ஆவிக்குரிய வளமூட்டி வளர்க்க உற்சாகப்படுத்தும் என நம்புகிறோம். நம்மை இரட்சிப்புக் கேற்ற ஞானமடையச் செய்வதால் வேதாகமத்தைத் தினமும் வாசிக்க உங்களை உற்சாகப்படுத்துகிறோம்.

இந்த பத்திரிகையில் காணப்படும் எல்லா கட்டுரைகளும் அனைத்துலக கிறிஸ்டடெல்ஃபிய வழிமுறை யிலிருந்து தெரிந்தெடுத்து மொழி பெயர்ப்பு செய்து பிரசுரமாகியுள்ளன.

*"இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால், புது சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின" (2. கொரிந்தியர் 5:17).*



நம் ஆண்டவருக்காக சகித்தார்கள். இன்றைய உலகிலும் கூட எல்லா சகோதர சகோதரிகளுமே பாடுகளற்றிருக்கிறார்கள் என்று சொல்வதற்கில்லை. இருப்பினும் நமக்கு ஒரு நிச்சயமான நம்பிக்கை கொடுக்கப்பட்டிருக்கிறது. "ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடே கூட உட்காரும்படிக்கு அருள் செய்வேன் *(வெளிப்படுத்துதல் 3:21).* நாம் ஆழமாக வேர் கொள்ளும்படியாக நாம் அனுதினமும் வார்த்தையால் போஷிக்கப்படுவோமாக சோதனைகளும் உபத்திரவங்களும் வரும்பொழுது, நாம் உறுதியாக, அசையாமல் நின்று கடைசி வரை அவைகளை சகித்து நிற்போம்."

### முள்ளுகளுக்குள் விதை

முள்ளுகளுக்குள் விழுந்த விதை துக்ககரமானதும், பரிகசிக்கப்படத்தக்கதுமான நிலைக்கு வருகிறது. அநேக மக்கள் (திட்டமாகவே, பரிசேயரும் வேதபாரகரும்) செல்வத்தை ஆசீர்வாதத்தின் அடையாளம் என்றே கருதுவர். ஆனால் ஐசுவரியம் வஞ்சனையுள்ளது. தன்னில் தானே ஐசுவரியம் கெட்டதல்ல, ஆனால், அதைச் சம்பாதிக்க ஒருவன் என்ன செய்கிறான்? அதை ஏராளமாய்ப் பெற்ற பிறகு என்ன செய்கிறான் என்பதைப் பொறுத்தது. ஆண்டவருடைய பணியிலிருந்தும் வேலையிலிருந்தும் ஐசுவரியம் நம் கவனத்தைத் திருப்புமாயின், அவைகள் நம்மை அடிமைப்படுத்திவிட்டன, நம் எஜமானன் ஆகிவிட்டன. நமக்கு காத்தராகிய இயேசுகிறிஸ்து எனும் ஒரே எஜமானன் இருப்பாராக.

### நல்ல நிலத்தில் விழுந்த விதை

நல்ல, செழிப்பான நிலத்தில் விழுந்த விதை கனிகொடுக்கிறது. பிரதிகிரியையின் தொடர் முக்கியமானது. கேட்டல், புரிந்து கொள்ளுதல், கனிதருதல். முதலில் நாம் மனிதருடைய பாரம்பரியங்களை அல்ல, தேவனுடைய வசனத்தைக் கேட்க வேண்டும். நாம் வசனத்தைப் படித்து, அதன் பொருளை உள்வாங்கிக்கொள்ளவேண்டும். பின்னர் அதைப் பயன்படுத்தி (அதன்படி நடந்து) நல்ல கனி கொடுக்க வேண்டும்.

கொடுக்கும் கனியின் அளவு வித்தியாசப்படலாம். அவர் நமக்குக் கொடுத்திருக்கும் திறமைகளுக்குத்தக்கதாக தேவன் நம்மிடமிருந்து கனியை எதிர்பார்க்கிறார். தேவன் ஒருவரே. நாம் அவர் எதிர்பார்ப்புகளுக்கேற்ப இருந்திருக்கிறோமா என்பதை அறிவார். நம் திறமைகளுக்குத் தக்கதாக நம்மால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு உழைப்போம். சோர்ந்து போக வேண்டாம்.

நம் வேலை சிறந்ததென நிரூபிக்க வேண்டும். பயிற்சி பெறும் ஓட்டக்காரன், ஒவ்வொரு பயிற்சி வேளையிலும் ஓடிஓடி தன்னை மேம்படுத்திக் கொள்ள முயல்வான். நம்மைப் பிறரோடு ஒப்பிட்டுப் பார்ப்பது ஞானமல்ல. இத்தகைய ஒப்பிடுதல் பெருமை, பொறாமை, இளக்கரித்துப் போதல் மற்றும் ஏமாற்றம் போன்றவைகளுக்குத் தான் வழிநடத்தும். ஒப்பிடுவதற்கு ஒரே ஒரு அளவு தான் உண்டு. அது நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து. அவர் முன் நாமெல்லாரும் தாழ்ந்து போகிறோம். அதே சமயம் நாம் ஊக்கம் பெறுகிறோம். ஏனெனில் அவர் நீதியின் அளவு கோலை வைப்பதுடன், அவர் மீதுள்ள நம் விசுவாசத்தால் நம் தோல்விகளையும் மேற்கொள்வதற்கானவற்றையும் தருகிறார். தேவன் நமக்குக் கொடுத்திருக்கும் கிருபையின் முழு அளவிற்குத் தக்கதாக நாம் ஒவ்வொருவரும் கனி தரமுயல்வோம்.

நியாயப்பிரமாணத்தால் தீர்க்கப்படுவீர்கள்'' *(யாக்கோபு 2:9).*

தேவனே விளையச் செய்கிறவர் என்பதை நாம் எப்போதும் நினைவில் கொள்ளவேண்டும்.

**''மண்'' பற்றிய விளக்கம்**

விதை விதைத்ததன் பின், எல்லாமே மண்ணின் தரத்தைப் பொறுத்திருக்கிறது. ''உங்கள் கண்கண்ட காண்கிறதினாலும் உங்கள் காதுகள் கேட்கிறதினாலும், அவைகள் பாக்கியமுள்ளவைகள்'' இந்த வார்த்தைகள் நம்மைப் பற்றி கூட சொல்லப்படவேண்டும். இல்லையென்றால் தேவனுடைய வார்த்தை நம்மில் வேர்பிடிக்கவில்லை என்று தான் பொருள். நாம் உயிரோடிருக்க சிலாக்கியம் பெற்றிருக்கும் வரை அவ்வாறே சொல்லப்படட்டும். இயேசு போதிக்கும் கருத்து 'முன்குறிக்கப்படுதல்' எனும் எண்ணத்தை முற்றிலுமாகத் தவிர்த்துவிடுகிறது. வசனம் என்கிற விதையை 'இருதயமும் மனமும்' என்ற நிலம் பெற்றுக்கொள்கிறது. நிலமானது நம் வாழ்நாள் முழுவதும் வரம் பெற்ற செழிப்பானதாகவும் பலன் தருவதாகவும் இருக்கவேண்டும். இது ஒரு கடினமான வேலை. ஆனால் எந்த ஒரு செடியைப் போல நம்மைப் போஷித்து பாதுகாப்பாய் நடத்தி, நம் ஆவிக்குரிய தேவைகளைக் கவனிக்க நமக்கு ஒரு உழவர் தேவை. ''நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம் *(1 கொரிந்தியர் 15:57)* உழவன் கவனிக்காமல் விட்டுவிட்டால் ஒரு விதை நல்ல ஆரோக்கியமான (செழிப்பான) தாவரமாக முடியாதது போலவே, நாமும் தானாக வளர முடியாது. நமது பங்கை நாம் ஆற்றவேண்டும்.''

**வழியருகே விதை**

கருத்துக்கள் நம் மனதுள் போனாலும் உண்மையில் ஆழப்பதிவதில்லை. இதை ஒத்துள்ளது வழியருகே உள்ள விதை. கருத்துகள் சுவையானதாக இருக்கலாம், அதை சிறிது காலம் நம்பவும் செய்யலாம். ஆனால் பொல்லாத உலகக் காரியங்கள் அதை விட நமக்கு முக்கியமாகி விடுகின்றன. வசனம் நம்மில் வேர்கொள்ள நாம் சந்தர்ப்பம் அளிப்பதில்லை. ஆகவே உலகின் பொல்லாத காரியங்கள் தேவனுக்கடுக்காத காரியங்களை விட்டு விலகும்படி நம்மை மயக்கி இழுக்கின்றன. சபையை காட்டிலும், உலகிலுள்ள நம் நண்பர்கள் நமக்குக அதிக முக்கியமானவர்களாகின்றனர். நாளாவட்டத்தில் நாம் வாடிப்போகிறோம். ஒருவன் உலகின் சிநேகிதனாயிருந்து கொண்டே கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு சகோதரனாயிருக்க முடியாது *(மத்தேயு 6:24).*

**கற்பாறையான நிலத்தில் விதை**

கற்பாறையான நிலத்தில் விழும் விதை வெகு வேகமாக முளைத்தெழும்பும் ஏனென்றால் பாறைகளிலுள்ள வெடிப்புகள் நீரை நன்கு தேக்கி வைக்கும் திறனுடையவை. ஆனால் வெகு விரைவாக வளர்ந்த செடி சீக்கிரத்தில் வாடி விடுகிறது. இதற்குக் காரணம், இப்படிப்பட்ட மண்ணில் செடிக்கு வேண்டிய சத்து போஷாக்கு எதுவும் இல்லை. தேவனுடைய வார்த்தையினிமித்தம் வரும் பாடுகளையும் உபத்திரவங்களையும் தாங்கிக் கொள்ள முடியாதவன் இப்படித்தான் இருக்கிறான். முந்தைய காலங்களில் இத்தகைய அழுத்தங்கள் இடறுதற்கேதுவானவையாக இருந்தன. அநேகர் பயங்கரமான கொடுமைகளையும் பரிதாபமான மரணங்களையும்



# ''என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின் படியே ஆகக்கடவது''



''மேலும், நாங்கள் இன்றைக்கு அல்லது நாளைக்கு இன்ன பட்டணத்திற்குப் போய், அங்கே ஒரு வருஷம் தங்கி, வியாபாரஞ் செய்து, சம்பாத்தியம் பண்ணுவோமென் கிறவர்களே, கேளுங்கள். நாளைக்கு நடப்பது உங்களுக்குத் தெரியாதே. உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது? கொஞ்சக்காலந்தோன்றிப் பின்பு தோன்றாமற்போகிற புகையைப் போலிருக்கிறதே.'' (யாக்கோபு 4:13,14).

வயற்காட்டு எலி ஒன்று ஜாக்கிரதையாய்க் கட்டியிருந்த வளையை, ஓர் உழவனின் ஏர் உடைத்துவிட்டதைக் கண்ணுற்ற ஸ்காட்லாந்து தேசத்துக் கவிஞன் ராபர்ட் பர்ன்ஸ் எழுதிய வார்த்தைகளை ஜான் ஸ்டீய்ன்பெக் புகழ்வாய்ந்தவைகளாக ஆக்கினார்.

மனிதரும் சுண்டெலிகளும்
போட்டனர் சிறந்த திட்டங்களை
அவை எல்லாமே தப்பும் தவறுமாயின
துக்கமும் வலியும் தான் மிச்சம்
கிடைக்குமென்ற சந்தோஷம் எங்கே?
இல்லை, இல்லை இல்லவே இல்லை

ஒரு ஏர் நம்மை நிலைக் குலையச் செய்வதற்கு வாய்ப்பே இல்லையென்றாலும், எத்தனையோ சின்னச் சின்ன விஷயங்கள் நம்மை கலவரமடையச்செய்து, எவ்வளவு கவனமாகத் திட்டங்கள் தீட்டினாலும் அவற்றைக் கலைத்து விடுகின்றபடியால், நம்மெல்லாருக்குமே இந்தக் கவிஞனின் வார்த்தைகள் பொருந்தும். நாம் யாக்கோபு அப்போஸ்தலனின் வார்த்தைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறோமா? வாழ்க்கையின் நிலையாமையைக் கூறியபின் நமக்கு புத்திமதியும் தருகிறார்.

''ஆண்டவருக்குச் சித்தமானால், நாங்களும் உயிரோடிருந்து இன்னின்னதைச் செய்வோம் என்று சொல்ல வேண்டும்'' *(யாக்கோபு 4:15)*

முதலாம் நூற்றாண்டில், தன்னைச் சுற்றியிருப்பவர்கள், தங்களின் திட்டமிட்ட செயல்கள் நடந்தே தீரும்; எதையாவது விரும்பினாலே நடந்துவிடும் என்பது போல் பேசிக்கொண்டிருந்ததை யாக்கோபு கவனித்திருக்க வேண்டும். இப்படி தவறான பெருமை பாராட்டாதே இத்தகைய தவறான நம்பிக்கை பெருமை என்றழைக்கப்படுகிறது. நீதிமொழிகள் 27:1ல் ''நாளையதினத்தைக் குறித்துப் பெருமை பாராட்டாதே; ஒரு நாள் பிறப்பிப்பதை அறியாயே.''

21ம் நூற்றாண்டின் கடினமான பாடங்களில் ஒன்று, எதுவுமே நாம் விரும்புவது போல் நடக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. திருமணமாகி வாழ்க்கை நடத்துவது, அன்பான குடும்பங்கள், சந்தோஷமான விடுமுறைக் காலங்கள் - இவை எல்லாமே கற்பனைக் கெட்டாத சக்திகளால் சுக்குநூறாக உடைந்து போகக் கூடும் என்பது துக்ககரமான விஷயம். இமைப் பொழுதில் நண்பர்கள், உறவினர், உடைமைகள் யாவும் பறிக்கப்பட்டுப் போகலாம். யாக்கோபு சொல்வதைப் போல் தான் இருக்கிறது.

"உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது? கொஞ்சக்காலந்தோன்றிப் பின்பு தோன்றாமற்போகிற புகையைப் போலிருக்கிறதே." (4:14)

### தேவன்தான் - சுயம் வேண்டாம்.

காலம் இருக்கும்போதே, சுயத்திற்கு சேவை செய்வதற்குப் பதில், தேவனுடைய சித்தத்தைச் செய்யவும், அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படியவும் முனைய வேண்டும். நமக்கு ஏற்றாற்போல் காரியங்களைத் திட்டம் பண்ணிக்கொண்டு 'கர்த்தருக்குச் சித்தமானால்' என்ற சொற்றொடரையும் சேர்த்துக்கொள்வது போதாது. நாம் செய்ய நினைப்பதை நாம் செய்வதை தேவன் உண்மையிலேயே விரும்புகிறாரா என்று நாம் நம்மையே கேட்டுக்கொள்ள வேண்டும். அது அவருக்கு சேவை செய்வதாகுமா? அல்லது நம் ஆவிக்குரிய முன்னேற்றத்திற்கு உதவுமா?

இவை வாழ்க்கையில் முக்கியமான கேள்விகள். தேவனைப் பிரியப்படுத்துவதே நம் மனதில் மேலோங்கியிருக்க வேண்டும். நம்மெல்லாருக்கும் தேவனுடைய நோக்கம், கர்த்தராகிய இயேசுவின் வருகையைச் சார்ந்திருக்கிறது என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும்.

தேவன் உண்மையாகவே நாம் என்ன செய்ய வேண்டுமென விரும்புகிறார் என்பதை நாம் எவ்வாறு அறிவது? நம் வழிக்கே விடப்படுவோமாயின், சில காரியங்கள் தேவனுடைய சித்தத்திற்கு இசைந்திருப்பதாய் எண்ணிக் கொள்வோம். ஆனால் உண்மையில் அவர் நமக்காக வைத்திருப்பதற்கு முற்றிலும் எதிர்மாறானதாயிருக்கும். நாம் எதையுமே யோசிக்காமல் அப்படியே எடுத்துக்கொள்ளக் கூடாது. ஏனெனில் வாழ்க்கை என்பது அபாயகரமான ஒன்று. ஆகவே நம் தீர்மானங்கள் மற்றும் திட்டமிட்ட செயல்களை ஜெபத்தில் வைக்க வேண்டும்.

ஆகவே நாம் மெய்யான தாழ்மையோடு, "நம் ஆண்டவர் தம் வருகையைத் தாமதிப்பாரானால், நம் தேவனுக்கு பிரியமானால் இன்னின்ன காரியத்தைச் செய்வோம்," என்று சொல்வோமாக. நாம் விழித்திருந்து காத்திருக்கையில், தேவனுடைய நியாயத்தீர்ப்புகள் இமைப் பொழுதில், எல்லாவற்றையும் அடித்துக்கொண்டு பெருவெள்ளம்போல் பிரவாகித்து வரும் என்பதை நினைவில் கொள்வோமாக.

மாம்சத்தில் நாம் செய்ய நினைக்கும் எந்தக் காரியமும் சுயத்தைப் பிரியப்படுத்தி அதை திருப்தி செய்வது அந்த நாளிலே நமக்குப் பயன்படாது.



உழவன் விதை நிறைந்த பையை ஒரு தோளின் மேல் போட்டுக்கொண்டு, அடுத்த கையால் பையில் உள்ள விதையை எடுத்துத் தூவுவான். பணக்கார உழவன் சிறு சிறு துளைகளுள்ள பையில் விதைகளை நிரப்பி, அதைக் காளை ஒன்றின் பின்பகுதியில் கட்டி உழுத வயல் முழுவதும் அலைய விடுவான்.

### யூதர்களால் தெரிந்தெடுக்கப்பட்ட விதைப்பு

பரிசேயர்களும் வேதபாரகரும் தங்கள் விதையை விதைப்பதில் விதைக்குமிடத்தைத் தேர்வு செய்து தான் விதைப்பார்கள். இதை நாம் நல்ல சமாரியன் உவமையின் போதே விவாதித்தோம். சமாரியாவுக்குப் போய் ஒரு பரிசேயன் மிஷனெரி வேலை செய்வதைக் கற்பனை செய்து கூடப் பார்க்க முடியாது.

சரித்திர சான்றுகள் வேதபாரகரும் பரிசேயரும் முற்றிலும் வித்தியாசமான முறையைக் கையாண்டதாகக் கூறுகின்றன. "ரபிகளின் கருத்துப்படி, நீதிமான்கள் அல்லது கல்விமான்களுக்குத் தான் தேவனுடைய ரகசியங்களின் வெளிப்பாடு கொடுக்கப்படும்" என்று கூறுகிறார்கள். யார் பரிசேயருடைய பிரசங்கத்தினால் பலனடைய வேண்டும் என்பது குறித்துப் பரிசேயர்களின் மனப்பான்மையை எபிரெய முனிவர்கள் சித்தரித்துக் காட்டும் கதை ஒன்றுண்டு. "ஒரு பணக்காரனுக்கா அல்லது ஒரு ஏழைக்கா - யாருக்குக் கடனாகப் பணம் கொடுப்பாய்? என்று ஒரு பெண்மணியிடம் கேட்கப்பட்டது.' "பணக்காரனுக்குத் தான்; ஏனெனில் அவன் அதை இழந்தாலும்கூட, அவனால் பணத்தைத் திருப்பித் தர முடியும்" என்று பதிலிறுத்தாள். அதே போல் சினிமா அரங்குகள், குளியலறைகள் போன்றவற்றில் செலவழிக்கும் முட்டாள்களுக்கு தேவன் ஞானத்தைத் தராமல், கல்விச்சாலைகளில் அதைப் பயன்படுத்தக்கூடிய முனிவர்களுக்குத் தருகிறார் என அந்தப் பெண்மணிக்குச் சொல்லப்பட்டது.

பணக்காரனுக்குக் கடன்கொடுக்கும் கதை நையாண்டி செய்வது போலிருக்கிறது. ஆனால் நம் தலைமுறையில் அதுவே சிறந்த நிதிநிர்வாகம் செய்யும் கொள்கையாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. தன் முதல் வீட்டை அல்லது கடன் வாங்கிப் பொருள் வாங்கிய யாருக்குமே இந்த தத்துவம் நன்கு புரியும்.

முதலில் அந்தக் கடன் வாங்குவதற்கு உனக்குப் பணம் தேவையில்லை என நிரூபிக்க வேண்டும். ஆனால் வேத வசனத்தைப் பொறுத்த வரையில் அப்படியல்ல. பணக்காரன், ஏழை, இனவேறுபாடு, இவை எதையும் பார்க்காது, எவ்வித நிபந்தனையுமின்றி, எல்லாருக்கும் ஒரே மாதிரி கொடுக்கப்படவேண்டும். வயது மற்றும் ஆண், பெண் என்று தேவன் பார்ப்பதில்லை.

"நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே. ஏனெனில் உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேரோ, அத்தனை பேரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டீர்களே. யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை, ஆணென்றும் பெண்ணென்றுமில்லை, நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள். ஒன்றாயிருக்கிறீர்கள். நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும் வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள்" (கலாத்தியர் 3:26-29).

"பட்சபாதமுள்ளவர்களாயிருப்பீர்களானால், பாவஞ்செய்து, மீறினவர்களென்று

யூதர்கள் தங்கள் மதத்திற்கு மாறி வந்தவர்களை இரண்டு வகையினராகப் பிரித்துப் பார்த்தார்கள். முதல்வகையினர் நீதியாய் நடக்கும் மதம்மாறியோர். இவர்கள் மோசேயின் நியாயப்பிரமாணத்தை, அதின் எல்லா சடங்காச் சாரங்களுடன், விருத்தசேதனம் உட்பட எல்லாவற்றையும் ஏற்றுக் கொண்டதுடன் கடைப்பிடித்தும் வந்தார்கள். அந்தியோகியா பட்டணத்து நிக்கோலஸ் *(அப்போஸ்தலர் 6:5)* இப்படி மதம்மாறி யூத மார்க்கத்திற்கு வந்தவன். இன்னொரு வகையினர் 'வாசல் வரை மதம் மாறியோர்.' - அவர்கள் வாசலில் நிற்போர். அவர்கள் சபையாரோடு முழுமையான ஐக்கியம் கொண்டு, அவர்களோடு ஜெப ஆலயத்தில் உட்கார அனுமதிக்கப்படவில்லை. இவர்கள் நியாயப்பிரமாணத்தின் ஒரு சில பகுதிகள், முக்கியமாக நோவாவின் உடன்படிக்கையைக் *(ஆதியாகமம் 9:1-7)* கைக்கொண்டுவந்தனர். இவர்கள் விருத்தசேதனத்தை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்.

விக்கிரக வணக்கம் பெரிதும் நிரம்பிய ரோம உலகு யூத மார்க்கத்தால் கவரப்பட்டதால், பரிசேயரும் வேதபாரகரும் தங்கள் மிஷனெரி முயற்சிகளை விரிவுபடுத்த உற்சாகமடைந்தனர். பாக்ஸ் ரோமனாவால் இதற்கு நல்ல ஆதரவு கிடைத்தது. ஆகவே, கிறிஸ்து வருவதற்கு முன்னரே சமாதானம் மற்றும் பாதுகாப்பின்காலம், மிஷனெரி ஊழியம் செழித்தோங்கத்தக்கதாக பயணம் செய்தல் போன்றவற்றை ரோம அரசு ஏற்படுத்தியிருந்தது. ஒரு விதத்தில், பார்க்கப் போனால் பவுல் மற்றும் அப்போஸ்தலர்களின் நற்செய்திப்பணி, முதலில் வேலை செய்த இந்த யூத மிஷனெரிகள் போட்ட அஸ்திபாரத்தின் மேல் கட்டப்பட்டது தான். எப்போதுமே, பவுல் ஒரு புதிய நகருக்குச் சென்றதும் முதலில் போகும் இடம் ஜெப ஆலயங்கள் தாம். 'வாசல் வரை மதம் மாறியோர்' தாம் அவரிடம் வந்த மனந்திரும்பியவர்கள்.

விதைக்கிறவன் உவமையைக் கேட்ட "திரளான ஜனங்கள்" பரிசேயர், வேதபாரகரின் பிரசங்க முறைகளை நன்கு அறிந்தவர்களாயிருக்க வேண்டும். இப்பொழுது இந்த இரு உவமைகளிலிருந்து சில மிக வல்லமையான கொள்கைகளைக் கற்றுக் கொள்ள வேண்டியவர்களாகி விட்டார். தேவனுடைய வார்த்தை எவ்விதம் பிரசங்கிக்கப்படவேண்டும் என்பது பற்றிய கொள்கைகள் அவை.

ரோம ஆளுகையினின்று தங்களை விடுவித்து மறுபடியும் தங்களை சுதந்திர மக்களாக மேசியா ஆக்குவாரென மக்கள் கூட்டம் எதிர்பார்த்தது. அவர்கள் எதிர்பார்த்திருந்த மேசியாவால் நாடும் இஸ்ரவேல் புத்திரரும் உயர்த்தப்பட்டு மகிமையடைவார்கள் என எதிர்பார்த்தார்கள். அவர்கள் நம்பிக்கை ஒரு ஆவிக்குரிய எதிர்பார்ப்பாயில்லாமல் அரசியல் சம்பந்தமானதாய் இருந்தது. ஒவ்வொரு தேசத்திலிருந்தும், ஜாதியினரிலிருந்தும் மொழிபேசுபவர்களிலிருந்தும் கர்த்தர் தம் நாமத்திற்கென்று ஒரு மக்கள் திரளைக் கூட்டிச் சேர்க்கும் செயல் பல தலைமுறைகளுக்கு நீடிக்கும் என்று அவர்கள் சற்றும் எதிர்பார்க்கவில்லை. நம் ஆண்டவரின் அழைப்பு எப்படி இருக்கும் என்றும், மனிதஇனம் அதற்கு எப்படியெல்லாம் பிரதிகிரியை செய்யுமென்றும் விதைக்கிறவனின் உவமை தெளிவாகக் கூறுகிறது.

**வேதவசனத்தை ஒழுங்கற்று கண்டபடி விதைத்தல்**

விதைக்கிறவன் விதைகளை ஒழுங்கற்ற முறையில் விதைகளைத் தூவி விதைக்கையில், எல்லாவிதமான நிலங்களிலும் விதைகள் விழுகின்றன. வாழ்க்கையிலும் இது உண்மையாகத்தான் இருக்கிறது. நம் ஆண்டவரின் காலத்தில்



ஆனால் நாம் நம் முழு வாழ்க்கையையும் தேவனுடைய கரங்களில் கொடுத்து, நம்மைக் கண்காணித்து வழிநடத்தும்படி அவரை நம்புவோமெனில் அவர் நம்மைப் பராமரிப்பார் என உறுதியாய் நம்பி அமர்ந்திருக்கலாம்.

அப்படித் தான் இயேசுவும் வாழ்ந்தார். அவர் தன் முழு நம்பிக்கையையும் அவருடைய பிதாவின் மேல் வைத்து, பரிபூரணக் கீழ்ப்படிதலினால் தன்னை அவருக்குக் கீழ்ப்படுத்தினார். "மரண பரியந்தம்" கீழ்ப்படிந்தார்.

சிலுவை என்னும் கஷ்டமான காரியத்தை எதிர்நோக்கி அவர் பயன்படுத்தி ஜெபித்த வார்த்தைகளே நம் ஜெபமாயிருக்க வேண்டும். எதையும் நமக்கென வைத்துக் கொள்ளாமல் நம்மை கீழ்ப்படுத்துவது கடினமாயிருந்தாலும் பரவாயில்லை. இந்த நாளுக்கும், ஒவ்வொரு நாளுக்கும் இதோ, இங்கே ஒரு ஜெபம்.

"என்னுடைய சித்தத்தின் படியல்ல, உம்முடைய சித்தத்தின் படியே ஆகக்கடவது." *(லூக்கா 22:42).*

# "தேவனிடம் திரும்புதல்"



எருசலேமின் தெருக்களிலே பேதுரு என்ற மீனவன்! ஒருவன் மக்கள் திரளுக்கு உரையாற்றுகின்றான்.

அவன் அவர்களுக்கு கலிலேயாக் கடலில் அப்போது தான் பிடித்த மீனை விற்றுக் கொண்டிருக்க வில்லை. சில நாட்களுக்கு முன் குற்றவாளியாக நகரத்திற்கு வெளியே கொலை செய்யப்பட்ட நசரேயனாகிய இயேசுவைப் பற்றி அவர்களிடம் சொல்லிக் கொண்டிருந்தான். ஆறு வாரங்களுக்கு முன் அவர் பொய்யாக குற்றஞ் சாட்டப்பட்டு! தவறாகக் குற்றவாளி என தீர்க்கப்பட்டு, கொடூரமாக சிலுவையில் அறையப்பட்டார் என்று கூறிய பேதுரு, தன் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களும் அச் செயல்களில் பங்கு கொண்டிருந்தார்கள் எனக்குற்றம் சாட்டினார்.

"தேவன் நிர்ணயித்திருந்த ஆலோசனையின்படியேயும், அவருடைய முன்னறிவின்படியேயும் ஒப்புக்கொடுக்கப்பட்ட அந்த இயேசுவை நீங்கள் பிடித்து,

அக்கிரமக்காரருடைய கைகளினாலே சிலுவையில் ஆணியடித்துக் கொலை செய்தீர்கள்." *(அப்போஸ்தலர் 2:23)*

## இரு மாபெரும் சத்தியங்கள்

அந்தக் குற்றச்சாட்டை நன்கு கவனித்தீர்களானால் இரண்டு காரியங்களைப் பார்ப்பீர்கள். முதலாவது நடந்த சம்பவத்திற்கு ஓரளவு அவர்களும் பொறுப்பாளிகள் எனக் கருதப்பட்டது. மக்கள் கூட்டம் அவர் மரணமடைய வேண்டுமென்றும் அவருக்குப் பதில் கொலைக்காரன் ஒருவன் விடுதலையாக வேண்டுமென்றும் கூச்சலிட்டார்கள்.

கவனிக்கப்பட வேண்டிய இரண்டாவது காரியம் பிரமிப்படையச் செய்கிறது. நடந்ததெல்லாமே தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தின் ஒரு பகுதி என அப்போஸ்தலன் விவரிக்கிறார். அது ஒரு விபத்தோ, தவறோ அல்ல. இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டது, தேவனுடைய மீட்புத் திட்டத்தின் ஓர் பகுதி. அதில் தேவனுடைய மக்களை அவர்கள் பாவத்திலிருந்து இரட்சிக்கும்படி அவருடைய குமாரன் தம் ஜீவனை ஒப்புக் கொடுத்தார். அதனால் அவர்கள் பொறுப்பு குறைந்து போகவில்லை - ஆனால் அப்படியிருந்தும் அவரின் மரணம் மன்னிப்பைக் குறித்த நம்பிக்கையை அவர்கள் முன் வைத்தது.

பேதுரு மேலும் தன் பேச்சைத் தொடர்ந்த போது அது தெளிவாயிற்று. அவன் அவர்களிடம் தாவீது அரசன் மற்றும் அவனின் (கவிதைகள்/எழுத்துக்கள்) பற்றி எடுத்துக் கூறினான். ஒரு இரட்சகருக்காகவும் விடுதலையளிப்பவருக்காகவும் - மரித்து மீண்டும் உயிரோடு வருபவருக்காகவும் ராஜா எதிர்பார்த்திருந்ததைத் தன் கவிதைகளில் எழுதினார் என்று கூறினான். தன் சந்ததியில் ஒருவர் மகிமையும் கனமும் பெற்றவராக உயர்ந்திருப்பார் என்று தாவீது எழுதினான். இயேசு தான் அந்த தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றினார்.

"இந்த இயேசுவை தேவன் எழுப்பினார்; இதற்கு நாங்களெல்லாரும் சாட்சிகளாயிருக்கிறோம்........ ஆகையினால், நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினாரென்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக்கடவர்கள்." *(அப்போஸ்தலர் 2:32,36)*

## "நாங்கள் என்ன செய்ய வேண்டும்?"

தந்திரக்காரர் வசம் அகப்பட்டு, குழப்பமடைந்து அல்லது இயேசு யாரென்ற மெய்யான அடையாளத்தையும் அவர் எங்கிருந்து வந்தவர் என்பதையும் குறித்துத் தவறு செய்தவர்களான எருசலேம் மக்கள் மீது வீசப்பட்ட இக்குற்றச்சாட்டு எத்தகையது? அவர்கள் அவரை மாய்மாலக்காரன், தவறான கொள்கையைப் போதிக்கிறவன் மதத் தலைவர்களுக்கு சவால் விட எழும்பியவன் என்றெல்லாம் நினைத்தார்கள். ஆனால் இப்பொழுதோ, அவர்கள் தேவனுடைய குமாரன் கொலை செய்யப்படவேண்டும் எனக் கேட்டார்கள் என்று பேதுரு கூறினான். உலக இரட்சகர் சிலுவையில் அறைப்பட்ட பொழுது அவரைப் பரிகாசம் பண்ணினார்கள். அவர்கள் இருதயத்தில் குத்தப்பட்டவர்களாகிக் கீழ்க்கண்டவாறு கேட்டதில் ஆச்சரியம் எதுவுமில்லை.



அவர்கள் கண்டும் காணாதவர்களாயும், கேட்டும் கேளாதவர்களாயும், உணர்ந்து கொள்ளாதவர்களாயும் இருக்கிறபடியினால் நான் உவமைகளாக அவர்களோடே பேசுகிறேன். ஏசாயாவின் தீர்க்கதரிசனம் அவர்களிடத்தில் நிறைவேறுகிறது. அதாவது; காதாரக் கேட்டும் உணராதிருப்பீர்கள்; கண்ணாரக் கண்டும் அறியாதிருப்பீர்கள். இந்த ஜனங்கள் கண்களினால் காணாமலும், காதுகளினால் கேளாமலும், இருதயத்தினால் உணர்ந்து மனந்திரும்பாமலும், நான் அவர்களை ஆரோக்கியமாக்காமலும் இருக்கும்படியாக அவர்கள் இருதயம் கொழுத்திருக்கிறது; காதால் மந்தமாய்க் கேட்டு தங்கள் கண்களை மூடிக்கொண்டார்கள் என்பதே.

உங்கள் கண்கள் காண்கிறதினாலும், உங்கள் காதுகள் கேட்கிறதினாலும் அவைகள் பாக்கியமுள்ளவைகள். அநேக தீர்க்கதரிசிகளும் நீதிமான்களும் நீங்கள் காண்கிறவைகளைக் காணவும், நீங்கள் கேட்கிறவைகளைக் கேட்கவும் விரும்பியும், காணாமலும் கேளாமலும் போனார்களென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

ஆகையால் விதைக்கிறவனைப் பற்றிய உவமையைக் கேளுங்கள்.

ஒருவன் ராஜ்யத்தின் வசனத்தைக் கேட்டும் உணராதிருக்கும்போது பொல்லாங்கன் வந்து அவன் இருதயத்தில் விதைக்கப்பட்டதைப் பறித்துக்கொள்ளுகிறான்; அவனே வழியருகே விதைக்கப்பட்டவன்.

கற்பாறை இடங்களில் விதைக்கப்பட்டவன், வசனத்தைக் கேட்டு, உடனே அதைச் சந்தோஷத்தோடே ஏற்றுக்கொள்ளுகிறவன். ஆகிலும் தனக்குள்ளே வேரில்லாதவனாய் கொஞ்சக்காலம் மாத்திரம் நிலைத்திருப்பான், வசனத்தினிமித்தம் உபத்திரவமும் துன்பமும் உண்டானவுடனே இடறலடைவான்.

முள்ளுள்ள இடங்களில் விதைக்கப்பட்டவன், வசனத்தைக் கேட்கிறவனாயிருந்தும், உலகக் கவலையும் ஐசுவரியத்தின் மயக்கமும் வசனத்தை நெருக்கிப் போடுகிறதினால் அவனும் பலனற்றுப் போவான்.

நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவனோ வசனத்தைக் கேட்கிறவனும் உணருகிறவனுமாயிருந்து, நூறாகவும் அறுபதாகவும் முப்பதாகவும் பலன் தருவான் என்றார்.

## சிந்திக்கும் மக்களுக்கு யூத மார்க்கம் கவர்ச்சியானது

எப்பிபானஸ் எனப்பட்ட நாலாம் அந்தியோகஸ் காலத்தில் (கி.மு.175-164) அநேக யூதர்கள் பாலஸ்தீனத்தினின்று சிதறப்பட்டுப்போவதற்கு உபத்திரவங்கள் காரணமாயிருந்தது. இந்தப் இடம்பெயர்தலின் விளைவுகளாகப், புறஜாதியாரின் உலகெங்கும் அநேகக் குடியேற்றங்களும் ஜெப ஆலயங்களும் நிறுவப்பட்டன. புறமதத்தினரின் நாடுகளில் உள்ள படித்த மக்கள் மத்தியில் யூதமார்க்கம் மிகவும் பிரபலமாகியது. அநேக புறஜாதியினர் 'தோரா'வைப் (Torah) படித்ததினால் உயர்ந்ததும் சிறந்ததுமான நடைமுறை சன்மார்க்க கொள்கைகளையும், மனித இனத்தோடு செயல்படுகிற ஒரே தேவனைப் பற்றிய பகுத்தறிவுக்கேற்றதும், தத்து விளக்கத்தையும் தெளிவான வெளிப்பாட்டையும் பெற்றுக்கொண்டனர். தோரா (Torah) என்பது பழைய ஏற்பாட்டின் முதல் ஐந்து புத்தகங்களின் எபிரெய தொகுப்பு. எல்லா புறஜாதியினரின் மதங்களிலுள்ள ஏமாற்றும் பழக்கவழக்கங்கள் மற்றும் அதிக எண்ணிக்கையுள்ள தேவர்கள் என்பவைகளுக்கு முற்றிலும் வேறுபட்டதாக தோரா இருந்தது.

# விதைக்கிறவன்

"அவர் அநேக விசேஷங்களை உவமைகளாக அவர்களுக்குச் சொன்னார். கேளுங்கள், விதைக்கிறவன் ஒருவன் விதைக்கப்புறப்பட்டான்" *(மத்தேயு 13:3).*

பரிசேயரும் வேதபாரகரும் நற்செய்திப்பணியாளர்களாக (மிஷனெரிகள்) செயல்பட ஆர்வமுடனிருந்தனர். "ஒருவனை உங்கள் மார்க்கத்தானாக்கும்படி சமுத்திரத்தையும் பூமியையும் சுற்றித்திரிகிறீர்கள்" *(மத்தேயு 23:15)* என்று அவர்களைப் பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவின் காலத்திற்குள் பரிசேயர்கள் தேவனுடைய வார்த்தையையும் தால்மூதையும் (Talmud) ரோம சாம்ராஜ்யத்தின் மூலைமுடுக்கெல்லாம் விதைத்து விட்டார்கள்.

**தால்முத்** (Talmud)



கி.மு. 5ம் நூற்றாண்டில் பாபிலோனிய சிறையிருப்பின் காலத்தில் ரபிகளின் வாய்வழியாய் கிடைத்த யூதவிதிகள் மற்றும் போதனைகளின் எழுதப்பட்ட தொகுப்பு தால்மூத் (Talmud) எனப்படுகிறது. இதில் இரு பிரிவுகள் உண்டு. மிஷ்னா (Mishna) என்பது எழுதப் பட்ட விதிகள் அல்லது சட்டங்கள் ஆகும். கெமாரா (Gemara) என்பது மிஷ்னாவின் விளக்கவுரை. நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் காலத்தில் இரண்டுமே பரவலாக இருந்து வந்தது என்றாலும், ஏறத்தாழ கி.பி. 6ம் நூற்றாண்டில் தான் முழுவதுமாக எழுத்துக்களாகப் பொறிக்கப்பட்டன *(மத்தேயு 13:1-23).*

''இயேசு அன்றையத்தினமே வீட்டிலிருந்து புறப்பட்டுப்போய், கடலோரத்திலே உட்கார்ந்தார். திரளான ஜனங்கள் அவரிடத்தில் கூடி வந்தபடியால், அவர் படவில் ஏறி உட்கார்ந்தார், ஜனங்களெல்லாரும் கரையிலே நின்றார்கள். அவர் அநேக விசேஷங்களை உவமைகளாக அவர்களுக்குச் சொன்னார். கேளுங்கள், விதைக்கிறவன் ஒருவன் விதைக்கப் புறப்பட்டான். அவன் விதைக்கையில் சில விதை வழியருகே விழுந்தது. பறவைகள் வந்து அதைப் பட்சித்துப் போட்டது. சில விதை அதிக மண்ணில்லாத கற்பாறை இடங்களில் விழுந்தது; மண் ஆழமாயிராததினாலே அது சீக்கிரமாய் முளைத்தது. வெயில் ஏறினபோதோ, தீய்ந்து போய், வேரில்லாமையால் உலர்ந்து போயிற்று. சில விதை முள்ளுள்ள இடங்களில் விழுந்தது; முள் வளர்ந்து அதை நெருக்கிப்போட்டது. சில விதையோ நல்ல நிலத்தில் விழுந்து, சிலது நூறாகவும், சிலது அறுபதாகவும், சிலது முப்பதாகவும் பலன் தந்தது. கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன் என்றார்."

அப்பொழுது சீஷர்கள் அவரிடத்தில் வந்து "ஏன் அவர்களோடே உவமைகளாகப் பேசுகிறீர்?" என்று கேட்டார்கள். அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக பரலோகத்தின் ரகசியங்களை அறியும்படி உங்களுக்கு அருளப்பட்டது. அவர்களுக்கோ அருளப்படவில்லை. உள்ளவன் எவனோ அவனுக்குக் கொடுக்கப்படும், பரிபூரணமும் அடைவான், இல்லாதவன் எவனோ அவனிடத்தில் உள்ளதும் எடுத்துக் கொள்ளப்படும்.



"சகோதரரே, நாங்கள் என்ன செய்ய வேண்டும்?" (2:37)

மனித கண்ணோட்டத்தின்படி பார்த்தால் நம்பிக்கையற்ற நிலைதான். இரக்கமற்ற அரசன் ஒருவன் தன் மகனை ஒருவரும் அறியாவண்ணம் மாறுவேடத்தில் தன்னைப் பற்றித் தன் குடிமக்கள் என்ன நினைக்கிறார்கள் என்றறிய அனுப்பினால், அவர்களோ அப்பையனை வேண்டுமென்றே கொலை செய்தார்களென்றால் என்ன நடந்திருக்கும் என்று எண்ணிப் பாருங்கள். அவர்களை அழிப்பதற்கேதுவாகத் தான் தகப்பன் நடந்திருப்பான். அந்தக் கொலைக்குப் பொறுப்பானவர்கள் மீது இரக்கம் காட்டப்படமாட்டாது.

அதே போல், தேவனுக்கும் அவருடைய குமாரனுக்கும் விரோதமாக வேண்டுமென்றே துணிந்து செய்த குற்றத்திற்காக யூத மக்களும் தண்டனையை எதிர்பார்க்கலாம். மனிதகுலத்தால் இழைக்கப்பட்ட மாபெரும் பாவக்குற்றம் என்றழைக்கப்படும் இந்தப் பயங்கரமான கொடுமைக்கு திட்டமாகவே மன்னிப்பு கிடையாதுதான். 'ஆகவே' நாங்கள் என்ன செய்ய வேண்டும்? "எனக் கேட்ட பொழுது பேதுரு சொன்னதென்ன? தேவனின் அற்புதமான மன்னிப்பையும், நம் ஒவ்வொருவருக்கும் கிடைக்கக்கூடிய ஆச்சரியமான வாய்ப்பையும் வெளிப்படுத்துவதாக அவனது பதில் அமைந்திருந்தது."

"பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள். வாக்குத்தத்தமானது உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும், நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலிருக்கும் யாவருக்கும் உண்டாயிருக்கிறது என்று செல்லி இன்னும் அநேக வார்த்தைகளால் மாறுபாடுள்ள இந்தச் சந்ததியை விட்டு விலகி உங்களை இரட்சித்துக் கொள்ளுங்கள்" *(அப்போஸ்தலர் 2:38-40).*

**மனந்திரும்பி இரட்சிக்கப்படுங்கள்**

மனந்திரும்புதல் என்றால் என்ன? நம் பாவங்களுக்காக ஆழமாக வருந்தி நம் மீறுதல்களை தேவனிடம் அறிக்கையிட்டு, அவருடைய மன்னிப்பைத் தாழ்மையாக வேண்டுவது. பயங்கரமான, பாவத்தைச் செய்த பின்பு, தாவீது ராஜா அதைத்தான் செய்தான். தேவனும் கிருபையாக இரக்கமாக அவனை மன்னித்துவிட்டார். அவன் நன்றியறிதலுள்ளவனாய்க் களிகூர்ந்ததில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. அப்படிப்பட்ட நிலைமையில் யார்தான் சந்தோஷப்படாமல் இருப்பார்கள்? இயேசுவின் மரணத்திற்குக் காரணமானவர்கள் மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்றால், அவர்கள் தேவனிடமிருந்து ஒரு வரத்தைப் பெற்றுக்கொள்வார்கள் எனப் பேதுரு கூறினான். 'பரிசுத்த ஆவியின் வரம்' என்று முதலில் கூறி, பின் இரட்சிப்பின் விளக்கத்தைக் கூறினான் "இரட்சிக்கப்படுங்கள்............."

வெகுகாலத்துக்கு முன் இருந்த மக்களுக்குப் பேதுரு ஆச்சரியமும் அற்புதமுமான சத்தியத்தை அறிவித்தான். இரட்சிக்கப்பட விரும்புகிற

எல்லாரையும் தேவன் இரட்சிக்க விரும்புகிறார். பல ஆண்டுகளுக்குப் பின் எழுதிய நிருபத்திலும் அப்போஸ்தலன் இதையே கூறினார்.

''தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்துத் தாமதமாயிராமல், ஒருவரும் கெட்டுப் போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்" *(2பேதுரு 3:9).*

## பாவிகளை இரட்சிப்பதற்கு

திரும்பத் திரும்ப அநேகமுறை புதிய ஏற்பாட்டில் சொல்லப்பட்டுள்ள ஆச்சரியமும் அதிசயமுமான உண்மை என்னவெனில் தேவன் மனத்தாங்கல் அடைவதில்லை. மேலும் மீட்டு இரட்சிப்பதற்காக அவர் எந்த தூரமும் செல்வார். அதற்கு ஒரு அளவே கிடையாது என்பது தான். பவுல் அப்போஸ்தலனை எடுத்துக் கொள்ளுங்கள். மனதில் கொலைவெறியோடு தமஸ்குவிலுள்ள விசுவாசிகளைப் பிடிக்கச் சென்ற மனிதன் முப்பது வருஷங்களுக்குப் பின்னும் தேவனின் ஆச்சரியமான மன்னிப்பைக் குறித்து அதிசயித்தார். கீழ்க்கண்டவாறு எழுதினார்.

"என்னைப் பலப்படுத்துகிற நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து என்னை உண்மையுள்ளவனென்றெண்ணி, இந்த ஊழியத்திற்கு ஏற்படுத்தினபடியால், அவரை ஸ்தோத்திரிக்கிறேன். முன்னே நான் தூஷிக்கிறவனும், துன்பப்படுத்துகிறவனும், கொடுமை செய்கிறவனுமாயிருந்தேன்; அப்படியிருந்தும், நான் அறியாமல் அவிசுவாசத்தினாலே அப்படிச் செய்தபடியினால் இரக்கம் பெற்றேன். நம்முடைய கர்த்தரின் கிருபை கிறிஸ்து இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தோடும் அன்போடுங் கூட என்னிடத்தில் பரிபூரணமாய்ப் பெருகிற்று. பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கீகரிப்புக்கும் பாத்திரமுமானது; அவர்களில் பிரதான பாவி-நான்" *(1 தீமோத்தேயு 1:12-15).*

தனக்கு முன் வாழ்ந்த தாவீதைப் போல தானும் தேவனுடைய பிரமாணங்களை முறித்ததால் ஒருபாவியாக இருப்பதாகப் பவுல் அறிந்தார். உண்மையில் அவர் தம்மை ஒரு பிரதான பாவி என வகைப்படுத்தினார். ஆகவே அவரை தேவன் மன்னித்து இரட்சிப்பின் சுவிசேஷத்தை பவுல் பொறுப்பில் கொடுத்தார் என்பது விசேஷித்த ஒன்று. அது தேவனின் கிருபையையும் நன்மையையும் அதிகமாய் உணர வைத்தது. பவுல் தன் வாழ்க்கையை, தான் புதிதாய்க் கண்டுபிடித்த ஆண்டவரின் சேவைக்கென அர்ப்பணித்து தேவன் காட்டிய தயவுக்கு பிரதிகிரியை செய்தார் அவர் ஒரு இரட்சிக்கப்பட்ட பாவி. இனிமேல் தனக்குச் செய்யப்பட்ட நன்மைக்கு நன்றியை வெளிப்படுத்தும் வகையில் வாழ முயன்றார். இந்த வார்த்தைகளைக் கேளுங்கள்.

''கிறிஸ்துவுடனே கூடச் சிலுவையிலறையப்பட்டேன். ஆயினும் பிழைத்திருக்கிறேன். இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார். நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ என்னில்



அந்த நேரத்தில் தானே கர்த்தராகிய இயேசு எல்லா தேசத்தாரையும் யோசபாத்தின் பள்ளத்தாக்கில் கூட்டிச் சேர்த்து அவர்களை நியாயந்தீர்ப்பார். இந்தப் புறஜாதியாருக்கும் யூதர்களுக்குமிடையே உள்ள சர்ச்சையைத் தீர்ப்பார். வல்லமையோடும் மாபெரும் மகிமையோடும் வானத்தின்மேகங்களின் மேல் வரும்போது, தேவனுடைய மக்களாகிய யூதர்கள் இந்த மனிதன் தங்கள் மேல் ஆளுகை செய்ய ஒத்துக்கொள்வார்கள். இவையெல்லாவற்றிலும் தேவனுடைய திட்டம் என்னவென்றால், யூதர்களுக்கும், பூமியிலுள்ள அனைவருக்கும் தம்மை வெளிப்படுத்துவது. இந்தப் பெரிய வல்லமையுள்ள சேனை திடீரென பயங்கரமான முறியடிக்கப்படுவது, இயேசுவைப் பற்றிய அறிவு உலகெங்கும் பரவ வழியை ஆயத்தமாக்கும். இப்பொழுது இயேசு வரும்போது என்னநடக்கும் என நமக்குத் தெரிகிறது. அவரின் பகைவர்கள் கொலை செய்யப்படுவர், மலை இரண்டாகப் பிரியும், யூதர்கள் விடுதலையாவார்கள், உலகெங்கும் கிறிஸ்துவைப் பற்றிய அறிவு பரவ வழி ஆயத்தமாக்கப்படும்! கிறிஸ்து பூமியில் ஆயிரம் ஆண்டுகள் அரசாள்வார்.

## கிறிஸ்து மரித்தோரை உயிரோடெழுப்புவார்

கோகின் பெரிய சேனையை அழித்து, யூதர்களை நெருக்கத்திலிருந்து விடுதலையாக்குவதோடு, கிறிஸ்து வரும்போது, அவர் செய்யப்போகிற முதல் காரியம் என்னவென்றால், மரித்த பரிசுத்தவான்களை உயிரோடெழுப்புவதோடு, உயிரோடிருப்பவர்கள் தம்மோடு ஆயிரம் வருஷம் வாழும்படியாக அவர்களை மாற்றுவதுதான். ஒவ்வொரு பரிசுத்தவானும் / பரிசுத்தவாட்டியும் அடக்கம்பண்ணப் பட்ட இடத்திலிருந்து அழைக்கப்படுவார். ஒருவர் கூட மறக்கப்படுவதோ, விட்டுவிடப்படுவதோ கிடையாது. பொல்லாங்கர்களோ தங்கள் கேட்டிலேயே அழிந்து போவார்கள்.

## கிறிஸ்துவின் வருகைக்கான அடையாளங்கள்

இயேசு கிறிஸ்து தம் வருகையைப் பற்றிப் பேசும்போது, தம் சீஷர்களிடம் தமது வருகைக்கான அடையாளங்களைப் பற்றிக் கூறினார். அதன் மூலம் காலம் நிறைவேறும் சமயம் பற்றி யாவரும் அறிந்து கொள்ளக்கூடும். அந்நாட்களில் யுத்தங்களும், தேசங்களுக்குள்ளே சஞ்சலமும் உண்டாகும் பூமியின் மீது வரப்போகும் காரியங்களைப் பார்க்க மக்களின் இருதயம் திகிலடையும், அக்கிரமம் அதிகமாவதினால் அநேகருடைய அன்பு தணிந்துபோம் *(மத்தேயு 24:2)* கிறிஸ்து வரும்போது, உலகில் விசுவாசிகள் சிலரே இருப்பார்கள் *(லூக்கா 18:8).*

பூமியின் ராஜாக்களின் பெரிய சேனை அழிக்கப்படும்போது, எல்லா மனித அரசாங்கங்களும் எல்லா மனிதமதங்களும் ஒன்றுமில்லாமல் இல்பொருளாகும்.

ஒரு வேண்டுகோள், இந்தக் காரியங்கள் இப்படித்தான் இருக்கிறதா என்று வேதத்தை ஆராய்ந்து பாருங்கள். நீங்கள் அவிசுவாசிகளாயிருந்தால், மனந்திரும்பி சுவிசேஷத்தை விசுவாசியுங்கள். நீங்கள் விசுவாசிகளாயிருந்தால், எனக்காக ஜெபியுங்கள், உங்களுக்காக ஜெபியுங்கள், வழிப்போக்கர்களாய் வாழுங்கள், அவருடைய மகிமைக்காக வாஞ்சித்து வாழுங்கள். நமது ஒளியும், நமது மகிமையும், நமது மகிழ்ச்சியுமாக இயேசு இருக்கும் புது எருசலேமில் கிருபையின் மூலம் நான் என்றென்றுமாய் வாழ்வேன்.

ஆமென், ஆமென்.

சேர்ந்து கொள்ளும்படி அறிவிப்பதை ஐரோப்பா, ஆசியா, ஆப்ரிக்கா மற்றும் அமெரிக்காவில் வசிப்பவர்கள் கேட்பார்கள். அந்த சமயத்தில் விசுவாசியான ஒவ்வொரு புறஜாதியானும் இந்த மக்களோடு சேர்ந்து களிகூருவான். ஏனெனில் கர்த்தர் அவர்களைச் சந்தித்தார் மேலும் மனுஷகுமாரன் பூமியிலே அரசாள வருவதற்கான அடையாளங்களில் இதுவும் ஒன்று. அப்பொழுது பூமியிலே யுத்தங்கள் இல்லாமற்போகும். தேசங்களெல்லாம் அவரை ஆசீர்வதிக்கப்பட்டவர் என்பார்கள்.

யூதர்கள் தங்கள் நாட்டிற்குத் திரும்பிய பிறகு, வியாபாரம் செய்யும் மக்கள் யூதர்களோடு வாணிபம் செய்வார்கள். ஏனெனில் தூரதேசங்களிலிருந்து அப்பொழுது தான் திரும்பிவந்த மக்கள், தங்களுக்கு வேண்டியவற்றைப் பெருங்கடலில் யாத்திரை செய்து வியாபாரம் செய்வோரிடம் வாங்குவார்கள். இதனால் கடல் வாணிபம் அவர்களுடையதாகும். *(ஏசாயா 60:5).*

## கோகு இஸ்ரவேலுக்கு விரோதமாக வரும்

யூதர்கள் திரும்பி வரும்போது, அவர்களெல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள் என்பது அநேகரின் கருத்து, ஆனால் தீர்க்கதரிசனத்தின்படி, அவர்களை மேற்கொண்டு, அவர்களின் செல்வம் மற்றும் பூமியை அவர்களிடமிருந்து எடுத்துக்கொள்ள புறஜாதியரால் ஒரு திடீர் முயற்சி எடுக்கப்படும். அவர்கள் வெற்றியடைவது போலவும் தோன்றும். அவர்கள் அதிக நெருக்கத்திலிருக்கும் அந்த சமயத்தில், இயேசு கிறிஸ்து தோன்றி, அவர்கள் பகைவர்களை அடக்கி, அவர்கள் மத்தியில் வாசம் பண்ணுவார். தீர்க்கத்தரிசனங்கள் தெளிவாகக் கூறுவது என்னவென்றால், யூதர்கள் திரும்பிவந்து, சமாதானமாகக் குடியிருக்கும்போது, அவர்களுக்கு விரோதமாகக் கூட்டாகச் சேர்ந்த ஒரு சக்தி அவர்களை மேற்கொள்ள முயற்சி செய்யும். இந்த சேனையை கோகு முன்னின்று நடத்தும். (எசேக் 38). கூட்டாகச் சேர்ந்த இந்த சேனை முகமதுவின் மதத்தை நம்பும் தேசங்கள் அடங்கியதாகும். தீர்க்கதரிசனம் தெளிவாக இப்படிக் கூறுகிறது. தேவனுடைய மக்களாகிய இஸ்ரவேலருக்கு விரோதமாக அவர்கள் தேசத்திலேயே கோகு வருவான். இது கடைசி நாட்களில் நடக்கும். இந்த சேனை எருசலேமுக்கு விரோதமாக வரும்போது, யூதர்கள் அதுவரை அனுபவித்திராத மிகவும் பெரிய கஷ்டமான காலமாக இருக்கும். அவர்களின் பகைவர்களால் முற்றிலும் முழுங்கப்படுவதைத் தவிர வேறு எதையும் அவர்கள் எதிர்பார்க்க முடியாது. *சகரியா 14ல்* நாம் அறிவது யாதெனில் எருசலேம் பட்டணத்தின் ஒரு பாதி கோகின் மூலம் ஆக்ரமிக்கப்படும். அவனுடைய பெரிய சேனை, எருசலேமை எடுத்துக்கொள்ளுமுன் திரளான யூதர்களை வெட்டிச் சாய்க்கும்.

இந்தச் சமயத்தில் தான் ஆண்டவருடைய பாதங்கள் ஒலிவமலையின் மீது நிற்கும். எருசலேமுக்கு மேலாக ஆகாயத்தில் இயேசு கிறிஸ்து காணப்படும்போது அவருடைய நண்பர்கள் மகிழ்வார்கள் அவரின் பகைவர்கள் பயப்படுவார்கள். இயேசு கிறிஸ்து எருசலேமின்மேல் காட்சியளிப்பதோடு, மகா பயங்கரமான, அதுவரை ஏற்பட்டிராத நிலநடுக்கத்தை ஏற்படுத்துவார். அது பூமியெங்கும், கடல்களிலும் உணரப்படும் *(எசேக்கியேல் 38).* அது ஒலிவமலையில் ஒரு பிளவை உண்டாக்கி அதை இரண்டாகப் பிரிக்கும். ஒ! அது என்ன மகத்துவமான நாளாகும்! அவர் வரும் நாளைச் சகிப்பவன் யார்?



அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத் தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்.” *(கலாத்தியர் 2:20).*

## இரட்சிக்கப்படுதல்

மனந்திரும்பி ஞானஸ்நானம் ‘பெறுவதற்கான’ அழைப்பு அற்புதமானது என்றாலும் ஒரு பெரிய சவால் அல்லது பொறுப்பு ஒருபக்கம், எருசலேம் மக்களுக்கு இலவசமாக முழு மன்னிப்பை முன்வைத்தது. அவர்கள் செய்தது எதுவும் அவர்கள் ஈடுபட்ட தீமையும். அவர்களுக்கு விரோதமாகத் தீர்க்கப்படாது. தேவன் மன்னித்து மறந்துவிடுவார். ஒரு எழுத்தாளர் கூறியது போல் அவர் மன்னிப்பு அப்படிப்பட்டது தான்.

“மேற்குக்கும் கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ அவ்வளவு தூரமாய் அவர் நம்முடைய பாவங்களை நம்மை விட்டு விலக்கினார்.” *(சங்கீதம் 103:12)*

தேவன் தரும் மன்னிப்புக்கு முடிவே (எல்லையே) இல்லை என்பது அதன் பொருள் : எவ்விதத்திலும் அது எல்லைக்குட்பட்டதோ, கட்டாயப்படுத்தி வருத்தத்தோடு தரும் மன்னிப்போ அல்ல. மறுபக்கத்தில், தேவனுக்கு நன்றியறிதலுள்ள புது எண்ணமுடையவர்களாய் முற்றிலும் வேறுபட்ட வாழ்வு வாழும் சாதாரண ஆண்கள் பெண்களுக்கு அருளப்பட்டது வியப்புக்குரியது.

அப்போஸ்தலனாகிய பேதுரு அதே கருத்தை சில நாட்களுக்குப்பின் எருசலேம் தேவாலயத்தின் பிரகாரத்திலே இன்னொரு கூட்டத்தினருக்கு அறிவித்தான். இன்னொரு கூட்டத்தாருக்கும் தேவன் கிருபையாய் அருளும் மன்னிப்பு குறித்துப் பேசினான்.

‘தேவன் அனுப்பிய அவரின் குமாரன் இயேசு என்றும், அறிவுடையோராய் இருக்க வேண்டிய மக்கள் உண்மையான விஷயங்களை அறியாதவர்களாய் இயேசுவைக் கொடூரமாய் நடத்தினார்கள். இவையெல்லாமே தேவனுடைய கிருபையுள்ள நோக்கத்தின் ஒரு பகுதி. ஏனெனில் வெகு காலத்திற்கு முன்னரே இரட்சகரும் மீட்பருமாகிய ஒருவரின் வருகையைப் பற்றி தேவன் முன்னறிவித்திருந்தார். பின்னர் பேதுரு இந்த அழைப்பை விடுத்தார்.’

“ஆனபடியினாலே, கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்து இளைப்பாறுதலின் காலங்கள் வரும்படிக்கும், முன்னே குறிக்கப்பட்ட இயேசுகிறிஸ்துவை அவர் உங்களிடத்தில் அனுப்பும்படிக்கும், உங்கள் பாவங்கள் நிவிர்த்திசெய்யப்படும் பொருட்டு நீங்கள் மனந்திரும்பி குணப்படுங்கள்” *(அப்போஸ்தலர் 3:19,20).*

தேவன் என்ன விரும்புகிறார் என்பது பற்றிய நம் அறிவு படிப்படியாக முன்னேறி வருகிறது. தேவன் அருளும் இரட்சிப்பின் மூலம் நாம் நன்மை பெறவேண்டுமாயின் நாம்

மனந்திரும்ப வேண்டும்
ஞானஸ்நானம் பெறவேண்டும்
இரட்சிக்கப்பட வேண்டும்

நாம் தேவனோடு கூட ஒரு புது வாழ்வை ஆரம்பிக்க வேண்டுமாயின், சொல்லப்பட்டதன் படியே செயல்பட வேண்டும்.

## தரித்து நின்று பாரும்

**தேவனின் அதிசயமான கிரியைகளைக் கவனியுங்கள். பரிணாமக் கொள்கை - சிலந்தியோடு மூழ்கிப் போகிறது.**

அமைதியாய் ஓடும் ஆறு ஆழமானது - அப்படித்தான் சொல்லுகிறார்கள். அது உண்மையுங்கூட. அதில் மீன் பிடிக்கப் போனால், அங்கு பல்வேறு உயிரினங்களைக் காணலாம். எடுத்துக் காட்டாக ஐரோபிய நீர்ச்சிலந்திப்பூச்சி ஊர்ந்து - தவழ்ந்து செல்லும் இந்தச் சின்னஞ்சிறு உயிர் நீருக்கடியில் வாழ்கிறது; ஆனால் காற்றைச் சுவாசிக்கிறது! அது இந்த வித்தையை எங்கோ கற்றுக் கொண்டிருக்கிறது என நீங்கள் நினைக்கக்கூடும். இது எப்படி ?

இந்த சிலந்திப்பூச்சி நீந்தும்போது தன் வயிற்றுப் பகுதியில் ஒரு காற்றுக் குமிழைச் சுமந்தவாறு நீந்துகிறது. பின்னர் நீர் மூழ்கு கலம் போன்றதொரு கூட்டை பட்டினால் கட்டுகிறது. சிலந்தி தானாகவே இந்த முறையைப் பயன்படுத்தியிருக்க வேண்டும் - லட்சக்கணக்கான ஆண்டுகளாகப் பயின்றிருக்கவேண்டும் என தேவனற்ற பரிணாமக் கொள்கை நம்மை நம்பச் சொல்லும், ஆனால், இந்த எண்ணத்தை அதற்கு முதன் முதலில் கொடுத்தது யார் என்பது நம் கேள்வி.

சொல்வதற்கு இன்னும் இருக்கிறது. சாதாரண தண்ணீரில், நீரோடு இயற்கையான முறையில் ஆக்ஸிஜன் பரிமாற்றம் நடைபெறுகிறது. ஆனால் நிலைமை மோசமாக இருக்கும்போது, சிலந்தி, நீர் மட்டத்தில் காற்றுக் குமிழ்களை உண்டாக்கி, அவற்றை கீழேயுள்ள தன் கூட்டிற்குக் கொண்டு வருகிறது. இங்கேயும், எந்த சிலந்தியையும் மிஞ்சும் வகையில்





புத்திகூர்மைக்கான சான்றைக் காண்கிறோம். ஆழமான நீருக்கடியில் மூழ்கும் முறையை மனிதர் கண்டுபிடித்துள்ளனர். ஆனால் சிலந்திப் பூச்சி..... ?

ஆக நீர்சிலந்திப் பூச்சியோடு பரிணாமமும் மூழ்கிப்போகிறது !







# உலகளாவிய பயம் மற்றும் கிறிஸ்துவின் வருகை (சிந்தனை)

18ம் நூற்றாண்டின் இறுதியில், ஜான் ஆடம்ஸ் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த காலத்தில், மாசசுசெட்ஸ் மாநிலத்தின் ஒபர்னிலுள்ள பாப்திஸ்து சிற்றாலயத்தில் போதகர் எலியாஸ் ஸ்மித் வேதாகமத்திலிருந்து பிரசங்கித்துக் கொண்டிருந்தார். சபை உபதேசத் (Catechism) திலிருந்து பிரசங்கம் பண்ணும்படி அவருக்குப் பணம் கொடுக்கப் பட்டிருந்தது. ஆனால் அவர் பின்னொரு நாளில், “சபை உபதேசப் புத்தகத்தில் வேதவாக்கியங்களுக்கு எதிர்மாறான கருத்துக்கள் இருப்பதால் வேதாகமம் அறிவிப்பதற்கு முரண்பட்டது” என்று எழுதினார். ஆகவே அவர் தொடர்ந்து வேதாகமத்திலிருந்தே பிரசங்கித்தார். “இச்செய்தி பாஸ்டனிலுள்ள பேராயரிடம் எடுத்துச்செல்லப்பட்டது. ஆகவே நான் பணிநீக்கம் செய்யப்பட்டேன்” என்று எழுதுகிறார். அச் சிற்றாலயத்தில் இருநூறு ஆண்டுகளுக்கு முன் அவர் அளித்த பிரசங்கங்களில் ஒன்று 2003லும் அதற்கு அப்பாலும் மத்திய கிழக்கில் நடைபெற்ற சம்பவங்களை விவரித்துக் காட்டுவது போல் உள்ளது - ஆசிரியர்.

**தீத்துவால்** எருசலேம் ஆக்கிரமிக்கப்பட்ட பின், உலகின் எல்லா பாகங்களுக்கும் யூதர்கள் சிதறுண்டு போனார்கள். பல்வேறு நாடுகளில் வெவ்வேறு காலக்கட்டங்களில் அவர்கள் மிகவும் கொடுமையாக நடத்தப்பட்டார்கள். அவர்கள் அனுபவித்த எல்லாவற்றின் மத்தியிலும், அவர்களின் தீர்க்கதரிசிகள் அவர்களுக்குச் சொன்னபடியே கானான் தேசத்திற்குத் திரும்பும் எண்ணத்தை இன்னும் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். பெலிஸ்தியரின் (பாலஸ்தீனர்) தோள்களின் மேல் அமர்ந்தவாறு வாக்குத்தத்த பூமிக்குத் திரும்புவது ‘அந்த நாளில்’ அவர்களுக்குக் கடினமாக இருக்காது.

யூதர்கள் திரும்பிப் போவதற்கு முக்கியமான, தடையாயிருப்பது அந்த தேசத்தை இப்பொழுது சொந்தமாகக் கொண்டிருக்கிற துருக்கியர் தாம். யூதர்கள் திரும்பி வருமுன் இந்த சக்தி கட்டாயம் பலமிழக்கவேண்டும். அப்படியே நடக்கும். ஏனெனில் அவர்கள் (துருக்கியர்) எப்போதுமே இவர்களுக்குப் பெரும் சத்துருக்களாயிருந்து வந்திருக்கிறார்கள். ஏதோ ஒரு வழியில் துருக்கியர் நாட்டை யூதருக்கு விட்டுவிட்டுப் போய் விடுவார்கள். அவர்கள் போய்விடும் தூரம் அதிக மாயிருப்பதால் யூதர்கள் அவர்களுக்கு இனிமேல் பயப்படமாட்டார்கள். ஒரு புறஜாதியான் (ரோமனான தீத்து) அவர்கள் நாட்டிலிருந்து அனுப்பியது போலவே ஒரு புறஜாதியான் அவர்களைத் திரும்ப நாட்டிற்கு நடத்திக் கொண்டு வருவான். அவர்கள் தங்களுக்கென ஒரு தலைவனைத் தங்களுக்கு முன்னாகப் போகும்படி நியமித்துக் கொள்வார்கள். **(ஓசியா 1:11)** அப்படிப்பட்ட ஒரு காலத்தைப் பற்றிச் சொல்லவில்லை எனில் அதன் அர்த்தம் என்ன என்று என்னால் கூற முடியாது.

**மனுஷ குமாரனின் வருகை**

யூதர்களின் தலைவராகிய ஒருவரிடமிருந்து வரும் அறிவிப்பு ஒரே ஒரு யூதன். இருந்தாலும், அந்த இடத்திலும் யூதர் இருக்கும் ஒவ்வொரு இடத்திலும் உள்ள யூதனைத் தங்கள் பிதாக்களின் தேசத்திற்குத் திரும்பும் மாபெரும் சேனையோடு